முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

22 T I

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023 (2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)<br>Third Term Examination 2023 (2024) | දෙමළ භාෂාව හා සාහිත්‍ය I, II, III<br>தமிழ்மொழியும் இலக்கியமும் I, II, III<br>Tamil Language and Literature I, II, III | 11 වන ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 |

| | | |
|---|---|---|
| පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours | අමතර කියවීම් කාලය<br>மேலதிக வாசிப்பு நேரம்<br>Additional Reading time | මිනිත්තු යි 10<br>10 நிமிடம்<br>10 minutes |

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**
1. **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (X) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

1. “அண்ணல் யானை அணிதேர் புரவி…..” இங்கு புரவி என்பது.
   1) களிறு 2) குருவி 3) குதிரை 4) தேர்

2. “சிந்தூரத் திலக நுதல் சிந்தூரத்தின் மருப்பு ஒசித்த செங்கண் மாருவே” இதில் மருப்பு என்பது.
   1) நெற்றி 2) பல் 3) இதழ் 4) கொம்பு

3. “பீழை தருவது ஒன்றுமில்……” பீழை என்பதன் எதிர்ப்பதம்.
   1) இன்பம் 2) துன்பம் 3) மகிழ்ச்சி 4) பிரிவு

4. “நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலமளித்தது.” இதில்அனுகூலம் என்பதன் எதிர்ப்பதம்.
   1) நன்மை 2) பிரதிகூலம் 3) சாதகம் 4) வாய்ப்பு

5. “மூன்றுருவான குற்றால நாதர் நாடெங்கள் நாடே” இங்கு மூன்றுரு என்பதில் அடங்காதது.
   1) சிவன் 2) பிரம்மா 3) விநாயகர் 4) விஷ்ணு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. பொருத்தமற்ற சொற்களின் இணைவு.
   1) அலப்பும் - குரங்கு 2) எக்காளமிடும் - எருமை
   3) கதறும் - பசு 4) உறுமும் - சிங்கம்

7. வீதி விபத்து நடந்த பின்பு தான் உயிரின் வெலியு (Value) தெரிகிறது. இங்கு Value என்பதற்கான தமிழ்ச் சொல்.
   1) பெறுமதி 2) பயன்பாடு 3) மகத்துவம் 4) சிறப்பு

8. சர்ப்பம், அரவம், பணி எனும் சொற்கள் குறிக்கும் பொருள்.
1) பாம்பு 2) ஓசை 3) சரசரப்பு 4) வேலை

9. பின்வருவனவற்றுள் போர்த்துக்கேய மொழிச் சொல்.
1) பீரோ 2) இலாச்சி 3) விறாந்தை 4) அட்டவணை

10. யார் துணையுமின்றித் தானே தனித்து நின்று பகைவரை வெல்லும் திறன் படைத்தவன்.
1) உலகாயுதன் 2) நைட்டிகன் 3) அசகாயசூரன் 4) உலோபி

11. சாதுபோல் நடித்து தீது புரியும் ஒருவனைக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான தொடர்.
1) ஓட்டைவாயன் 2) அரைமனிதன் 3) அண்டப்புழுகன் 4) உருத்திராட்சப் பூனை

12. "இலக்கிய வளர்ச்சிக்கு திறனாய்வு அடிப்படையாய் அமைகிறது" இங்கு திறனாய்வு எனக் குறிப்பிடுவது.
1) கண்டனம் 2) விமர்சனம் 3) விளம்பரம் 4) அபிப்பிராயம்

13. கப்பல் செலுத்துபவன்.
1) சாரதி 2) வலவன் 3) மீகாமன் 4) உமணன்

14. "அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்" என்ற பழமொழி தரும் கருத்து.
1) அச்சமே அம்பலம் ஏறும் 2) பயன் புகழைத் தரும்
3) பயம் ஆபத்தைத் தரும் 4) துணிவே துணை

15. "புதிய வரிக் கொள்கை ஏழைகளின் வயிற்றில் அடித்தன." வயிற்றில் அடித்தல் எனும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்.
1) சீவனத்தைக் கெடுத்தல் 2) வயிறு வலித்தல்
3) வயிறு கிழிதல் 4) வயிற்றில் குத்துதல்

16. "கல்விக் கடலை நக்கிக்குடிக்க முற்படும் பூனை நான்" இதில் கல்விக் கடல் என்பது.
1) உயர்வு நவிற்சி அணி 2) உருவக அணி
3) உவமை அணி 4) தன்மை அணி

17. நவமணிகளில் தரளமும் ஒன்று இங்கு தரளம் என்பது.
1) சங்கு 2) முத்து 3) மாணிக்கம் 4) வைடூரியம்

18. "காதலியை காரிருளில் கானகத்தே...." இதில் சீர்தோறும் முதல் இடம் பெறும் "கா"
1) சிலேடை 2) எதுகை 3) மோனை 4) ஓசை

19. இடையரும் இடைமகளிரான ஆச்சியரும் வாழும் இடம்.
1) குறிஞ்சி 2) முல்லை 3) மருதம் 4) பாலை

20. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி அல்லாதது.
1) கடுகடு 2) எடுஎடு 3) விறுவிறு 4) மொறுமொறு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. "மாதுளம்பழம்" இதைப் பிரித்தால் வரும் "அம்" என்பது.
1) இடைநிலை 2) சந்தி 3) சாரிகை 4) விகுதி

22. பின்வருவனவற்றுள் செயப்படு பொருள் குன்றியும் குன்றாமலும் வரக்கூடிய வினை.
1) படி 2) எழுது 3) சிரி 4) நனை

23. "நான் கண்டிக்குப் போகிறேன்" இதில் "கு" உருபு உணர்த்துவது.
1) ஓர் இடத்தை நோக்கி நகர்தல் 2) காலக்குறிப்பு
3) எல்லைப் பொருள் 4) அனுபவப்பேறு

24. பின்வருவனவற்றுள் மென்தொடர் குற்றியலுகரமாக அமைவது.
1) நாற்று 2) படகு 3) வண்டு 4) நத்தை

25. உடனிலை மெய்மயக்கம் இடம்பெற்ற சொல்.
1) இன்னல் 2) துன்பம் 3) இனிமை 4) மான்விழி

26. "டகரம்" D என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்.
1) படகு 2) படம் 3) அடகு 4) சுடலை

27. 'கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்" இது.
1) தன்மை பன்மை வினைமுற்று 2) முன்னிலை வினைமுற்று
3) ஏவல் வினைமுற்று 4) படர்க்கை வினைமுற்று

28. அகர வரிசையில் அமையாத சொற்தொகுதி.
1) கடிதம், காடு, கிடுகு, கூரை
2) பாகல், பீடை, பூச்சி, பெட்டி
3) மானம், மீட்சி, மனம், முயல்
4) தட்டு, தாவரம், தீபம், தோட்டம்

- **பொருத்தமற்ற உதாரணம் இடம் பெற்ற தொகுதி.**

29. 1. காலப் பெயர் - கோடை, சனி, தை
2. சினைப் பெயர் - பூ, வேர், கை
3. இடப் பெயர் - வீடு, பாடசாலை, சந்தை
4. பண்புப் பெயர் - கோபம், முக்கோணம், பூ

30. 1. இயல்புப் புணர்ச்சி - கடலலை, யாழோசை
2. தோன்றல் விகாரம் - பலாவிலை, கோவில்
3. கெடுதல் விகாரம் - கதவு, நீலவானம்
4. திரிதல் விகாரம் - கடற்கரை, தாயுள்ளம்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிக.**

31. போதைப் பொருளைப் பாவிப்பதால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைப் பற்றி இளைஞர்கள் மத்தியில் ……………….. மேற்கொள்ளப்படல் வேண்டும்.
1) பிரசுரம் 2) பிரசாரம் 3) பிரகாரம் 4) பிரகடனம்

32. சரஸ்வதி வித்தியாலயம் தனது எண்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக ……………… ஏற்பாடு செய்தது.
1) பொன்விழா 2) அமுதவிழா 3) வெள்ளிவிழா 4) மணிவிழா

33. கலைவிழா மண்டபத்திற்குள் மாணவர்கள் ......................
1) ஒவ்வொன்றாகச் சென்றார்
2) ஒவ்வொன்றாகச் சென்றனர்
3) ஒவ்வொருவராகச் சென்றனர்
4) ஒவ்வொருவனனாகச் சென்றனர்

34. பலத்த கரகோசத்தின் மத்தியில் நடனக்குழு மேடையில் .....................
1) தோன்றின 2) தோன்றியது 3) தோன்றினர் 4) தோன்றினார்கள்

35. நாட்டின் தேசிய கலைஞர்களை கௌரவிக்கும் நோக்கோடு அரசினால் ........... விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
1) கலாபூஷணம்
2) குருபிரதீபா
3) தேசாபிமணி
4) நன்னெறி

36. மாடுகள் குதிரைகளைப் போல வேகமாக ஓட .................
1) மாட்டா 2) மாட்டாது 3) இல்லை 4) முடியாது

**பின்வரும் பாடலை அடிப்படையாக கொண்டு 37, 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

வரையான நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தின் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளபமறியா மையில்
அவலசெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம்
உதவி கன்னி உரைப்பது கேட்டீரோ?

37. இப்பாடலினூடாக கவிஞர் கூற விழைவது.
1) பெண்களின் அறியாமை
2) பெண்களின் ஆளுமை
3) பெண்களின் இயலாமை
4) பெண்களின் அழகு

38. திறம்புதல் என்பது.
1) ஏறுதல் 2) இறங்குதல் 3) தவறுதல் 4) பிடித்தல்

39. இப்பாடலுக்குப் பொருத்தமான கூற்று.
1) நிமிர்ந்த நடை
2) உறுதியற்ற செயல்
3) திடமான ஞானம்
4) எவருக்கும் பயப்படாத தன்மை

40. கீழே வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தும் போது கட்டுக்கோப்பான பந்தி உருவாகும். அதைத் தெரிவு செய்க.
அ) வேகமாக வளந்து வரும் விஞ்ஞானம் உலகையே ஒரு குடும்பமாக அமைத்து விட்டது.
ஆ) எனவே மொழிகளின் சொற்கோவையும் பெருகி வளர்ந்து கொண்டே செல்கிறது.
இ) இதனால் ஒருவருடன் மற்றொருவர் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அதிகரித்துள்ளது.
ஈ) அங்ஙனம் சுரந்த கருத்துக்களை உணர்த்தப் புதிய சொற்கள் பல தேவைப்படுகின்றன.
உ) அவ்வாய்ப்பு புதிய புதிய கருத்துக்களைச் சுரக்க வழி செய்யலாயிற்று.
1) அ, உ, இ, ஆ, ஈ
2) அ, உ, இ, ஈ, ஆ
3) அ, இ, உ, ஈ, ஆ
4) அ, உ, ஈ, இ, ஆ

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Provincial Education Department (NWP)**

| 22 | T | II |
|---|---|---|

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023 (2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023(2024)<br>Third Term Examination 2023 (2024) | දෙමළ භාෂාව හා සාහිත්‍ය I, II<br>தமிழ்மொழியும் இலக்கியமும் I, II<br>Tamil Language and Literature I, II | 11 වන ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 |

## தமிழ்மொழியும் இலக்கியமும் II

அறிவுறுத்தல்கள்
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- இவ் வினாத்தாள்களுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. சுருக்கமான விடை தருக.

i. பின்வருந் தொடரை சந்தி பிரித்து எழுதுக.
நீங்க ளைவீரு மொருவீரா யகலிடத்தை.

ii. "அமை" என்னும் சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வாக்கியம் அமைக்குக.

iii. "உங்களுக்கு ஏதும் உதவி தேவையா என்று மழலையில் கேட்டாள்"
பொருத்தமான நிறுத்தற் குறியை இட்டு மீண்டும் எழுதுக?

iv. நேர்முக வர்ணனையாளனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டைத் தருக?
விடய அறிவு, மனனத்திறன், பாவனை செய்தல், சமயோசித பேச்சு, பாடும் ஆற்றல்.

v. கீழ்வரும் தன்வினையை பிறவினையாக மாற்றுக?
நான் குளத்தில் நீராடினேன்.

vi. பனிக்குளிர், ஆதியந்தம், சாரைப்பாம்பு.
என்பன எவ்வகை தொகை எனக் குறிப்பிடுக?

vii. "பரித்தேரேறி வாவென்றழைப்பன போல் கூவினவே கோழிக்குலம்"
இத்தொடரில் இடம்பெறும் எழுவாய், பயனிலைகளை இனங்கண்டு எழுதுக?

viii. நிலை மொழியின் ஈற்றில் ல், ள் வந்து புணர்ச்சியின் போது வருமொழியில் 'த' கரம் வருமானால் எவ்வாறு மாற்றமடையும் எனக் கூறி உதாரணம் தருக?

ix. "உம்மும்மா குளிக்கியல்லியா? கொல்லேல சூடுதண்ணி வெச்சீக்கி"
இத்தொடரை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக?

x. பின்வருவனவற்றை ஒழுங்குபடுத்தி எழுதுக?
2023. 12. 12, புதுக்குடியிருப்பு, நாவலூர் கிராமம், இல. 105/4, க. பரமநாதன்

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து, அவ்விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பிட்டு 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.

அ. இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்றெல்லாம் கூறப்படும் இன்றைய காலக்கட்டத்திற்கு சிறுவர்களுக்கு பொழுது போக்கு சாதனமாக தொலைபேசியும் தொலைபேசி விளையாட்டுமே காணப்படுகின்றது. வீட்டின் அறைக்குள் ஓர் மூளையில் இருந்தவாறு விளையாடக் கூடிய இத்தகைய விளையாட்டுக்கள் உடலுக்கு எந்தவிதமான நன்மைகளையும் கொடுக்காது சிறுவர்களின் ஆரோக்கிய வாழ்வையே முடக்குகின்றது. உடற்பயிற்சியும் ஆரோக்கிமும் அற்று போகின்றது. உடல் ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சியும் வெளியக விளையாட்டுக்களும் அவசியம் என்பதை வலியுறுத்தி ஓர் விளக்கக் கட்டுரை.

ஆ. ஏட்டிலே எழுதப்பட்ட தமிழ்மொழி அச்சு ஊடகமாக நூல் வடிவம் பெற்றது. இணையத்தின் வருகையினால் புத்துயிர் பெற்றது. எனினும் தமிழ்மொழியின் அழிவுக்கு முற்றுப்புள்ளி வைத்த சாதனை தொழினுட்ப சாதனங்களுக்கே உரியதாகும். என்ற தொனிப்பொருள் புலப்படுமாறு ஆற்றப்படுகின்ற ஓர் சொற்பொழிவு.

இ. கற்றுத்தேர்ந்த மூலைசாலிகள் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமே பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். எனக் கருதும் ஒருவருக்கும் அவ்வாறல்ல, அவர்கள் கற்ற அறிவைப் பயன்படுத்தி எமது நாட்டு வளங்களைக் கொண்டு சுயதொழில்களை மேற்கொள்வதே மேலானது எனக் கருதும் மற்றொருவருக்கும் இடையில் இடம்பெறும் உரையாடல்.

ஈ. அந்தக் குடும்பத்தில் மூத்தவராய் பிறந்து வறுமை நிறைந்த தன் குடும்பத்தில் தனது ஐந்து சகோதர்களையும் படிக்க வைத்து ஆளாக்கி அந்தக் குடும்பத்தை உயர்த்த அவர் செய்த தியாகங்கள் சொல்லிடடங்காதவை. அவர் தனக்கென்று ஓர் துணையை கூட தேடிக் கொள்ளவில்லை. ஆனால் இன்று நோயுடன் போராடும் அவர் முதியோர் இல்லத்தில் முடக்கி கிடக்கின்றார். இக்கருப்பொருளை உணர்த்தும் வகையில் அமைந்த ஓர் கற்பனைச் சிறுகதை.

03. பின்வரும் உரைப்பகுதியை 40 – 45 சொற்களில் சுருக்கி எழுதுக.

19ம் நுற்றாண்டின் தமிழ் புலமையாளர் பலர் ஈழத்தில் தோன்றினர். இக்காலகட்டத்தில் மேலைத் தேசத்திலிருந்து வேற்றுமொழியான ஆங்கிலமொழி ஈழநாட்டில் அறிமுகமாயிற்று. கிறிஸ்தவ சமயப் பரம்பலுக்கு ஆங்கில மொழிப்புலமை பயன்படுத்தப்பட்டது. தமிழ்மொழிக் கல்வியை விட ஆங்கிலமொழிக் கல்வி மதிக்கப்படும் சூழ்நிலையில் உருவாகத் தொடங்கியது. 19ம் நுற்றாண்டினிறுதியில் ஈழத்திலிருந்து கல்விச் சூழலும் இத்தகையதொரு புதுமையான கல்விப் பரம்பலுக்கு ஏற்றதாகவே இருந்தது எனலாம். புதிய கல்வி மரபான குருகுலக்கல்வி முறைக்கு எதிராக திண்ணைப் பள்ளிக்கூட முறை மாறி பாடசாலைக் கல்விக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டமையால் தமிழ்க் கல்வி தாழ்வடையலாயிற்று. பண்பாட்டு மரபுகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. பிறசமயக் கருத்துக்களும் மரபான பழக்கவழக்கங்களை மாற்றியமைக்கத் தொடங்கின.

ஆங்கிலக் கல்வியின் பயனால் தமிழ் இலக்கிய இலக்கணம் தவிர வேறு புதிய பாடங்களை கற்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. பூதநூல், வேதநூல், தத்துவம் என்பன பற்றியும் அறிவு நிலை வளரத் தொடங்கியது. மக்களின் செல்வாக்கை பெறுவதற்காக ஆங்கிலேயர் ஈழத்தமிழரது வழிபாட்டின் அடித்தளமான குருகுலக் கல்வியை மாற்றியமைத்து பண்பாட்டு மரபிலும் மாற்றத்தை ஏற்படுத்தினர். வேலை வாய்ப்பு எனும் மோகத்தை மக்களுக்கு ஏற்படுத்த கல்வித் தொண்டைச் செய்ய முன்வந்தனர். இதனால் ஈழத்தின் வெஸ்லியன் மிஷன், அமெரிக்கன் மிஷன், சேர்ச் மிஷன், முதலிய சமய நிறுவன அமைப்புக்களை அமைத்து கல்வி பணியை மேற்கொண்டன. இக்கல்வி

மக்களை மரபான தமிழ்க் கல்வியை புறக்கணித்து மேலைநாட்டு இலக்கியங்களிலே ஈடுபாடு கொள்ள வைத்தது.

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக?

அபிநயத்தின மூலம் மனக்கருத்தை வெளிப்படுத்துதல் உலக மக்களனைவருக்கும் பொதுவானதாக இருத்தல் போலவே, கூத்துக்களிலே பாட்டுக்களின் பொருளுக்கேற்ப உணர்ச்சி புலப்பட அபிநயஞ் செய்தலும் மக்களுக்குப் பொதுவானதாக அமைந்துள்ளது. இதனாலேயே நமது இயற்றமிழும், இசைத்தமிழும் வழங்குவதற்கேற்ப நிலம் "வடவேங்கடம் முதற் தென்குமாரியாயிடைத் தமிழ் கூறு நூலகம்." என எல்லை வகுக்கப்பட்டது. போல நாடகத் தமிழ் வழக்கிற்கு நம்முன்னோர் எல்லை கூறாது விட்டனர். தமிழர் தம் பண்பாட்டை பிரதிபலிப்பனவாய் அமைந்த நாடகங்கள் பல முன்னாளிலே தமிழ் நாடேங்கும் நடந்தெனவென்றும் கால கதியில் அவற்றின் அமைப்பு முறைகூட அறியமுடியாதவாறு அழிந்தொழிந்தனவென்றும் தெரிகிறது. தமிழ் நாட்டிலே சில கிராமங்களில் நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. எனினும் சிறந்த கூத்து முறையில் அவை ஆடப்படுகின்றன. மலையாளக் கரையிலும் இலங்கையின் மட்டக்களப்புப் பகுதியிலும் நல்ல முறையிலமைந்த நாட்டுக்கூத்துக்களை ஆடும் பெரு வழக்கம் இன்றும் அழியாது நிகழ்ந்து வருதல் இங்கு கருத்தக்க ஒன்றாகும்.

1) உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான கூத்து அம்சங்கள் எவை?
2) தமிழ் நாடகங்கள் எவற்றைப் பிரதிபலிக்கின்றன?
3) நல்ல முறையில் அமைந்த நாட்டுக் கூத்துக்களை எங்கே காணலாம்?
4) நம் முன்னோர் நாடகத் தமிழ் வழக்கிற்கு எல்லை கூறாது விட்டதன் காரணம் யாது?
5) இயற்றமிழர், இசைத்தமிழ் வழங்கும் நிலத்தின் எல்லை எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளது?

05. தொடர்ச்சியாக பெய்து வந்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மக்களை பாதிப்படையச் செய்துள்ளது. நாவலூர் கிராமத்து நலன்புரி நிலையமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் பரிதாப நிலைக் கருதி நலன்புரி நிலையத்தின் தவிசாளரான மு. முகுந்தன் ஆன நீங்கள் மக்களின் இந்த நிலைக்கு காரணம் சீரற்ற வடிகாலமைப்பு, ஒழுங்கற்ற பாதை, பாதுகாப்பற்ற வீடமைப்பு என்னும் விடயங்களை மேற்கோள் காட்டி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைவர் திரு. ச. சௌந்தராகன் அவர்களுக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்றெழுதுக.

அல்லது

மக்கள் சேவை மையத்தின் வெளிக்கள உத்தியோகத்தரான சு. பிரசாந்தன் என உம்மைக் கருதிக் கொண்டு குறித்த கிராமத்தில் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகிய மாணவர்கள், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை, அதற்கான தீர்வுகள் என்பவற்றை உள்ளடக்கியதான வெளிக்கள அறிக்கை 100 சொற்களில் தயாரிக்குக.

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

22 T III

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

දෙමළ භාෂාව හා සාහිත්‍ය I, II, III
தமிழ்மொழியும் இலக்கியமும் I, II, III
Tamil Language and Literature I, II, III

11 වන ශ්‍රේණිය
தரம் 11
Grade 11

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

## தமிழ்மொழியும் இலக்கியமும் III

கவனிக்க
- ★ அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ★ 1,2,3,4 வினாக்களுக்கும் 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- ★ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளி 80 ஆகும்.

01. சுருக்கமான விடை தருக.

i. "மறையென லறியா மாயமி லாயமொடு"
இப்பாடல் வரியை சந்திப்பிரித்து எழுதுக.

ii. "தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன்"
அ) 'தெண்ணீர் கயம்' என்பதன் பொருள் யாது?
ஆ) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

iii. "கைவேல் - எறிகிற வேல் - இறகுள்ள அம்பு - இல்லாத
அம்பு – வாள் - சக்கரம் - இவற்றுக்கு மேலே
தெய்வப்படைகளிலும் கைவைக்கும் சமயம்"
அ) இக்கட்டுரையை எழுதியவர் யார்?
ஆ) கையாளப்பட்டுள்ள அணி ஒன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

iv. "வேதம் மூன்றும் பயவுள்ள நாடு, விசேஷம் மூன்றும்
குலாவுள்ள நாடு, போதம் மூன்றும் நலம் செய்யும் நாடு"
அ) போதம் மூன்றும் எவை?
ஆ) இதில் குறிப்பிடப்படும் நாடு எது?

v. "வெள்ளித்தகட்டினால் விரல் கட்டமிட: வளர்த்தரிவி வெட்டும்
இளந்தாரிமாரை நாவூறு வராமற் காரும் ஐயனாரே"
அ) வெள்ளித்தகட்டினால் விரல் கட்டமிடப்பட்டது எது?
ஆ) இப்பாடற்பகுதியில் வெளிப்படும் நம்பிக்கை யாது?

vi. "பதியிழந்தனம் : பாலனை இழந்தனம் : படைத்த நிதி இழந்தமை :
நமக்குலதென நினைக்கும்"
அ) பாலன், நாம் எனக்குறிப்பிடப்படுவர்களின் பெயர்கள் எவை?
ஆ) இக்கூற்று இடம்பெற்ற இலக்கியத்தை எழுதியவர் யார்?

vii. "பெரிதினிது பேதையார் கேண்மை – பிரிவின் கண்
பீழை தருவது இல்"
அ) இக்குறளின் பொருளைத் தருக?
ஆ) இத்தகைய நட்பு இனியது எனக் குறிப்பிடுவதற்கான காரணம் தருக?

viii. "ஏலம்பூ வாய் பொசுங்க எரியுது தீக்கொழுந்து காலப்
புனல் கனக்கும் கண்ணீரையும் சுமந்தது"
அ) இப்பாடல் வரியின் ஊடாக வெளிப்படும் உணர்வு யாது?
ஆ) "ஏலம்பூ வாய்" என்பதனூடாக வெளிப்படும் செய்தியாது?

ix. "கான் ஆள உனை விருத்த கண் இலா அருளிலி தன்
காதல் மைந்தன்"
அ) "கண் இலர் அருளிலி" எனக் குறிப்பிடுபவர் யார்?
ஆ) 'காதல் மைந்தன்' யார்?

x. "நான் மனிதன் மனிதனுக்கு இயல்பான எதனையும் வெறுப்பதில்லை"
அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?
ஆ) இக் கூற்று எத்தகைய பண்பை வெளிப்படுத்தி நிற்கின்றது?

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. புலங்களோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்களேதும் விரும்புவன் அங்கவை
நண்ணுறப் பெறல் திண்ணம் தாமென
இயங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்
விலங்கியற்கை யிலை யெனின் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுறலாகுமே

அ) புலங்கள், கரணம் ஆகிய சொற்கள் புலப்படுத்தும் விடயங்கள் யாவை?
ஆ) மானிடன் விரும்பியவற்றை அடையும் வகை எவை என்று குறிப்பிடப்பட்டுள்ளன?

ii. பங்கப் பழனந்து உழும் உழவர்
பலவின் கனியைப் பறிந்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கு இளநீர்
தனைக் கொண்டெறியும் தமிழ்நாடா!
கொங்கர்க கமரர் பதியளித்த
கோவே! ராச குலதிலகா!
வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தம் பிறைக்கும் விழிவேலே

அ) நாட்டுவளம் கூறப்படும் விதத்தினைத் தருக?
ஆ) இப்பாடல்வரியில் வரும் மூன்று பிறைகளும் எவை?

iii. கழித்து நீர்வரு துறை ஆற்றை, சூழ்படை
சுழித்து நீக்கியது என கள்ள ஆசையை
அழித்து, வேறு அவனி பண்டு ஆண்ட வேந்தரை
இழிந்து, மேல் ஏறி னான் தானும் ஏறினான்

அ) "கள்ள ஆசையை அழிந்து" எனும் வரிகள் புலப்படுத்தும் செய்தி யாது?
ஆ) "அவனி பண்டு ஆண்ட வேந்தர்கள்" எனக் குறிப்பிடப்படுவோர் யார்?

iv. தயிர் சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது. நிலா கொட்டி வைத்து இடத்தில் சற்று நேரம் இசகாமல் பிரகாமல் உறைந்து இருக்கும் எருமைத் தயிரைப் போல் ஆடாமல் இருந்தது. அதன் வடிவம் வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி ஆலிங்கணம் செய்கையில் உறை தயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது. அதன் அழகு.

அ) இச்சிறுகதையில் கையாளப்பட்டுள்ள உவமை அணியைத் தருக?
ஆ) இயற்கை வர்ணணைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

v. சமணரும், புத்தரும் இசைக்கலை, நடனக்கலை போன்ற கலைகளை வெறுத்தாராயினும் இளங்கோ அடிகள், திருத்தக்க தேவர் போன்றோர் தமிழ்க்கலைகளை நன்கு விரித்துக் கூறியிருக்கின்றனர். திருவள்ளுவர் சமணராக இருந்திருப்பார் என்ற கூற்றுக்கு அவருடைய காமத்துப்பாலும் இல்லறத்தைப் போற்றும் முறையும் முரண்பாடாக இருக்கின்றது.

அ) தமிழ்க்கலைகளை நன்கு விரித்துக் கூறியவர்கள் யாவர்?
ஆ) திருவள்ளுவர் சமணரல்லர் எனினும் கருத்து எவ்வாறு நிறுவப்படுகின்றது?

(4x5=20 புள்ளிகள்)

03. நாட்டார் பாடல்கள் என்ற பாடப்பகுதியில்,
அ) ஆற்றோடு ஆற்று நீர் அலைந்து வருமாப்போல்
ஆ) வானமுட்ட ஏலேலோ.....
இ) பட்டி பெருகவேணும்.......
எனினும் பாடல்களில் உழைப்பவர் மனப்பாங்கு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது. என்பதை விளக்குக.

(5+5+5=15 புள்ளிகள்)

**அல்லது**

கிருட்டிணன் தூதுச்சருக்கத்தில்
அ) வீமனின் கோபவேசம் வெளிப்படுத்தப்படும் விதம்.

(7 புள்ளிகள்)

ஆ) கிருட்டிணனின் சிறப்புக்கள்.

(4 புள்ளிகள்)

இ) நாட்டு வளம் கூறப்படும் விதம் என்பவற்றை விளக்குக.

(4 புள்ளிகள்)

(11) WWW.PastPapers.WiKi (10)

Download Term Test Papers, Short Notes From One Place!

04. எது நல்ல சினிமா என்ற பாடப்பகுதியில்

அ) சினிமா மொழியை குறியீட்டின் மூலம் எவ்வாறு வளம் அடையச் செய்யலாம் என்பதற்கான எடுத்துக்காட்டுக்களைத் தருக?

(7 புள்ளிகள்)

ஆ) சினிமாவின் தனித்துவப் பண்புகள், சினிமா மொழி என்பவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

(8 புள்ளிகள்)

**அல்லது**

அற்றைத் திங்கள் நாடகத்தில்

அ) பறம்பு மலையின் வளச்சிறப்புக்கள்.

(7 புள்ளிகள்)

ஆ) உறவு முறை அம்சங்கள் என்பவற்றை முன்வைக்கப்படும் விதங்களை விளக்குக.

(7 புள்ளிகள்)

**5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

05. அ) "தந்தி தபாற் கட்டுக்களை எடுத்துக் கொண்டு வா"
என்று நாவலர் கூறியதும் சபையில் ஏற்பட்ட அமைதி எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

ஆ) அருணந்தி சிவாச்சாரியார் பற்றி கட்டுரையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் யாவை?

(6 +4=10 புள்ளிகள்)

06. தத்தை விடுதூது என்ற கவிதையில்

அ) பெண் விடுதலை குறித்த கவிஞரின் எடுத்துக்காட்டல்கள் எவை?

ஆ) அன்றைய வாழ்வியல் அம்சங்கள் முன்வைக்கப்படும் விதங்களை விளக்குக.

(5 +5=10 புள்ளிகள்)

07. தமிழர் பண்பாடு என்ற பாடப்பகுதியில்,

அ) தமிழ் பக்தியின் மொழி என்பதற்கான ஆதாரங்கள் எவை?

ஆ) கட்டுரையில் ஒழுக்கம் தொடர்பான கருத்துக்கள் முன் வைக்கப்படும் விதங்களைத் தருக?

(5 +5=10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(11) WWW.PastPapers.WiKi (11)



Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
AkuraPilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න